அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விகாரி ஆண்டு வைகாசி - ஆனி ஜூன் 2019 முரசு 12 ஒலி 144



ஐயரின் சீர்பெறு செல்வராய் நல்ல தெள்ளமுது உண்டு உவந்த திருவாய்...
..இன்புகழ் கேட்ட வித்தகர் திருச்செவி விழாச்சுபம் கேட்கும் செவி...

பிரதி ஒன்றுக்கு ரூ.10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# ஆன்மீக சத்சங்க விழா

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்



ஐயபதின் சீர்பேசு செல்வர்வாய் நல்ல
தெள்ளமுதுண்டு உவந்த திருவாய்...
நின் புகழ் கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபம் கேட்கும் செவி...

– திருவருட்பா

நிகழும் விகாரி வருடம் ஆனித் திங்கள் 15ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (30.06.2019) அன்று

- திருவருட்பா அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- பக்தி
- தியானம்
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

ஜூன் 30 2019 ஞாயிறு

**இடம்:** அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**தொடர்புக்கு:** +91 8838540176,
+91 7502026565, +91 8940396760



அன்பர்கள் அனைவரும் இந்த ஞான வைபவத்தில் தங்கள் குடும்பத்தினருடன் கலந்துகொண்டு "கேள்வி விருந்தருந்தி" என்ற வள்ளற் பெருமானாரின் வாக்கிற்கிணங்க நாம் அனைவரும் இந்த அரிய ஆன்மீக தகவல்களை செவியுற்று, வாழ்க்கையில் கடைபிடித்து எல்லா மேன்மைகளையும் அடைய அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பர்கள் கவனத்திற்கு!


அகவல் பாராயணத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் முதல் நாள் இரவே (சனிக்கிழமை) வந்து தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

குருவருளும் திருவருளும் பெற அனைவரும் வருக! வருக!!

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

அன்பு உள்ளங்களே! தங்கள் இல்லத்தில் ஒரு தீபத்தினை ஏற்றி வைத்து அதைப் பார்த்தபடி, எல்லாம்வல்ல அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் நம்மை காப்பார் என்ற முழு நம்பிக்கையுடன் இந்த அருட்பாக்களை ஓதவும். பின்பு ஐந்து நிமிடம் அந்த தீப ஒளியை நம்முள் நினைந்து மகாமந்திரத்தை மனத்தினால் சொல்லி தியானம் செய்யவும். இல்லந்தோறும் இன்பம் பொங்க இந்த ஜோதி வழிபாட்டினை நாள்தோறும் செய்க.




உடல் குளிர; உயிர் தழைக்க; உணர்ச்சி ஓங்க;
உளம் கனிய; மெய்யன்பர் உள்ளத்து ஊடே
கடலனைய பேரின்பம் துளும்ப; நாளும்
கருணை மலர்த்தேன் பொழியும் கடவுள் காவே;
விடலறிய எம்போல்வார் இதயந்தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே; வேதம்
தொடலறிய வெளிமுழுதும் பரவி ஞானச்
ஜோதி விரித்து ஒளிர்கின்ற ஜோதித் தேவே.

சீர்பூத்த அருட்கடலே; கரும்பே; தேனே;
செம்பாகே; எனது குலத்தெய்வமே; நல்
கூர்பூத்த வேல்மலர்க்கை அரசே; சாந்த
குணக்குன்றே; தணிகைமலைக் கோவே; ஞானப்
பேர்பூத்த நின்புகழைக் கருதி ஏழை
பிழைக்க அருள் செய்வாயோ; பிழையை நோக்கிப்
பார்பூத்த பவத்தில் உறவிடில் என்செய்வேன்;
பாவியேன் அந்தோ வன்பயம் தீரேனே.

தனிப்பெருஞ் ஜோதித் தலைவனே;
எனது தந்தையே; திருச்சிற்றம்பலத்தே
கனிப்பெருங் கருணைக் கடவுளே;
அடியேன் கருதி நின்று உரைக்கும் விண்ணப்பம்;
இனிப்புறும் நினது திருவுளத்து அடைத்தே
எனக்கு அருள் புரிக நீ விரைந்தே;
இனிச்சிறு பொழுதும் தரித்திடேன்;
உன்றன் இணைமலர்ப் பொன்னடி ஆணை.

மருளும் துயரும் தவிரும்படி; என்
மனமன்றிடை நீ வருவாய் அபயம்;
இருளும் பவமும் பெறுவஞ்சக நெஞ்சினன் என்று
இகழேல் அபயம் அபயம்;
வெருளும் கொடுவெம் புலையும் கொலையும்
விடுமாறு அருள்வாய் அபயம் அபயம்;
அருளும் பொருளும் தெருளும் தருவாய்
அபயம் அபயம் அபயம் அபயம்.

# எது அறிவு?



**இ**த்தலைப்பினைக் கண்டதும், "நாம் தினமும் பலவற்றை அறிந்து கொண்டுதானே இருக்கிறோம். இதில் என்ன இருக்கிறது?" என்பன போன்ற கேள்விகள் எழலாம். ஆனால் உண்மையில், நம் அறியாமையை சுட்டிக் காட்டுவதே அறிவினால் நாம் அடையும் பயன். "எனக்கு எதுவும் தெரியாது என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் நான் ஒரு அறிவாளி" என்கிறார் சாக்ரடீஸ். "கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு" என்கிறார் நம் ஒளவைப் பாட்டி. இதைக் கொண்டு பார்க்கும்போது அறிவின் பயன் நம்முள் இருக்கும் அறியாமையை சுட்டிக் காட்டுவதே என்பது தெளிவாகிறது. யாராவது எனக்கு எல்லாம் தெரியும் என்று சொன்னாலோ அல்லது அவ்விதம் நினைத்துக் கொண்டு பேசினாலோ அவர்தான் இந்த உலகிலேயே தலைசிறந்த முட்டாள் என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ளலாம். நாம் இந்தக் கட்டுரைக்குள் செல்வதற்குமுன் ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இது யோகத்தின் தந்தையாகிய பதஞ்சலி மகான் அருளியது.

அதாவது, சூத்திரம் என்ற ஒரு சொல்லை நாம் கேட்டிருப்போம். அது தமிழில் தேற்றம் என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. இந்த சூத்திரங்கள் என்பவை தர்க்கங்கள் அல்ல. அவை முடிவுகள்.

மேலும், இவை மனன மந்திரங்கள். தியானத்தில் நாம் வழிகாட்டியாக கொள்ள வேண்டியவை. தியானத்தில் நமக்கு உருவாகும் அனுபவம் மூலமே இவற்றை நாம் உண்மையில் புரிந்துகொள்ள முடியும்.

ஆகவே, மகான்களது கருத்துக்களை நாம் நமது தர்க்கத்தை நோக்கி திருப்பிக் கொள்ளக் கூடாது. அப்படித் திருப்புவோமெனில் மிக அர்த்தமற்ற ஒரு மன இயக்கத்தை சென்றடைவோம். ஆனால், அகங்காரம் காரணமாக அதை மிக அறிவார்ந்த ஒரு செயல்பாடாக எண்ணி சுய திருப்தியும் கொண்டிருப்போம். உண்மையில் இதுவொரு அறிவற்ற செயலாகும்.



இதை ஏன் இங்கு சொல்கின்றோம் எனில், நமது தேசத்தில் இம்மாதிரி திண்ணை வேதாந்தம் ஆலமரக் காடுபோல விழுதும் வேரும் விட்டு வளர்ந்துள்ளது. நமது பெரிய சாபமே இதுதான். அகத்தில் அனுபவம் மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை புறத்தில் எத்தனை விதமாக தர்க்கவாதம் செய்தாலும் ஒரு பயனும் இல்லை.

இனி கட்டுரைக்குள் செல்வோம். கட்டுரையின் தலைப்பு எது அறிவு என்பதாம். இந்த அறிவை நமக்குத் தரக்கூடியது கல்வி மட்டுமே. ஆனால், கல்வி என்றால் என்னவென்பதைப் பற்றிச் சற்று ஆராய்வோம். இதன் பொருளை உணர்ந்தால்தான் கல்வியின் நோக்கத்தை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

நாம் கல்வி கற்பது பிற்காலத்தில் இன்பமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், விளைவு என்ன? போட்டி, பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி, பழிவாங்கும் உணர்ச்சி, ஏமாற்றம், மனஅழுத்தம் என இவைதான் மிஞ்சியது. பின் எதுதான் கல்வி? இங்குதான் கல்வியின் முடிந்த முடிவான நிலை நம் மகான்களால் நமக்கு அருளப்படுகிறது.

கல்லுதல் என்பதற்கு தோண்டுதல் என்று பொருள். கிணற்றினை உருவாக்க வேண்டுமானால் முதலில் நிலத்தை தோண்ட வேண்டும். அதாவது, ஊற்றுக் கண்ணை மூடியிருக்கும் தேவையற்ற மணல், கற்கள், பாறைகள் இவற்றை முதலில் தோண்டி அகற்ற வேண்டும். இவ்விதம் செய்து ஊற்றுக் கண்ணைத் திறந்துவிட்டால் பிறகு தண்ணீர் தானாகவே ஊற ஆரம்பித்துவிடும். **அதுபோல் நம்முள் இருக்கும் தேவையற்ற அழுக்குகளை களைதல் வேண்டும். வெட்டி வேரோடு எடுக்க வேண்டும். இவ்விதம் முதலில் நம் குற்றங்களை அறிந்து திருவருள் துணையோடு நீக்கிக் கொண்டால் பல ஜென்மங்களாக மூடிக்கிடக்கும் நமது அறிவுக் கண் திறந்து கொள்ளும்.** இதைத்தான் திருவள்ளுவப் பெருந்தகையார் "கற்க கசடு அற" என்றார். அதாவது, படி; குற்றங்கள் நீங்குவதற்காகப் படி என்பதே இதன் பொருள். ஆனால், இதற்கு எதைப் படிக்க வேண்டும்?

அன்பு உள்ளங்களே! நாம் இப்போது படிக்கும் கல்வி வாழ்க்கைக் கல்வி அல்ல. இது நம்முள் இருக்கும் குற்றங்களைப் நீக்க உதவாது. இது பிழைப்பிற்கான படிப்பு மட்டுமே. எனவேதான் **"கற்க கசடு அற"** என்றவர் அடுத்ததாக **"கற்பவை கற்க"** என்கின்றார். கற்க வேண்டியதை கற்றால்தான் நம் குற்றங்கள் நீங்கும்.

*இதையே,* **“கற்கும்முறை கற்றறியேன்; கற்பன கற்றறிந்த கருத்தர் திருக்கூட்டத்தில் களித்திருக்க அறியேன்”** *எனத் திருஅருட்பாவில் பாடியுள்ள நம் பெருமானார் நாம் இப்போது படிக்கும் கல்வியை* **“மாயா இயல்புறு புன் கல்வி”** *என்றும்* **“சழக்குக் கல்வி”** *என்றும் இழித்துரைக்கின்றார். ஏனெனில் இது அகங்காரத்தையும், பெருமைப்பாட்டையும் உண்டுபண்ணுகின்றதே தவிர நம் குற்றங்களை நீக்குவதில்லை.*

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** *என வள்ளுவப் பெருந்தகை கடவுள் வாழ்த்துப் பகுதியில் அருளுகின்றார்.*

*அதாவது, தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன? என்பதாம்.*

*இங்கு கல்விக்கும் கடவுளைத் தொழுதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று தாம் வினவலாம். ஆனால், இங்கு ஒன்றை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு காரியத்தினால் நாம் அடையும் பயனை இரண்டாகச் சொல்கிறார்கள். ஒன்று அவாந்திரப் பயன் மற்றொன்று முடிவுப் பயன். இடையிடையே ஏற்படுவது அவாந்திரப் பயன். எல்லை முடிவுப் பயன். இதை வைத்து இக்குறளினை ஆய்வு செய்தால் அற்புதமான மிகத் தெளிவான விளக்கம் நமக்குக் கிடைக்கும்.*

*கல்விக்கும் அதனால் வரும் இன்பத்திற்கும் இடையேயான அவாந்திரப் பயனை இங்கு காண்போம்.*

**கல்வியினால் விளையும் அவாந்திரப் பயன்**

கல்வியினால் விளையும் பயன் அறிவு

அறிவினால் விளையும் பயன் ஒழுக்கம்

ஒழுக்கத்தினால் விளையும் பயன் அன்பு

அன்பினால் விளையும் பயன் அருள்

அருளினால் விளையும் பயன் துறவு

துறவினால் விளையும் பயன் கடவுளைத் தொழுதல்

**இறுதியாக, முடிவுப் பயனாக கடவுளைத் தொழுவதால் விளையும் பயன் மகிழ்ச்சி. இதுவே இன்பம் – பேரின்பம் – மெய்யின்பம்.** *இதை பயிற்றுவிப்பதே கல்வி.*

இக்கல்வியினை நம் பெருமானார், "நின்அடிச் சீர் மகிழ் கல்வி" என்கின்றார்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் இதுபோன்ற கல்வியை கற்பதற்கு நம் மனம் அதிகமாக விரும்புவதில்லை. இதை நம் பெருமானார் திருஅருட்பாவில்,

**பாசமுளோர் கைக்குடையவே எழுதிக் கட்டிவைத்த**

**இவ்வுலகப் பொய்க் கதையே யான் படிக்கும் புத்தகங்கள்** என்றும்

**நேசிக்கு நல்ல நெறியாம் சிவாகம நூல்**

**வாசிக்க என்றால் என்வாய் நோகும்** என்றும் ஜீவர்களாகிய நம் மனோநிலையை எடுத்துரைக்கின்றார்.

பந்தபாசத்தில் உழலுவோர் உரைத்த தேவையற்ற செய்திகளை படிப்பதற்கும், பார்ப்பதற்கும் பலமணி நேரம் செலவிடும் நம்மால், பற்றுக்களைத் துறந்து மனோலயம் செய்து அருள்நிலை நின்று உரைத்த நம் அருட்பாக்களை அரை மணிநேரம் பாராயணம் செய்யவோ, அது குறித்த சத்சங்கம் கேட்கவோ, அவ்வழியில் நிற்கவோ, தியானம் செய்யவோ முடிவதில்லை. நேரமில்லை என்ற காரணத்தைச் சொல்லி தவிர்த்துவிடுகிறோம்.

இவ்விதம் இருந்தால் நமக்கு மெய்ப்பொருள் விளக்கம் ஏற்படாது. இதனால் மெய்யறிவு விளங்காது. மெய்யின்பம் கைகூடாது.

மேலும், கல்வியினால் விளையும் அவாந்திரப் பயனை வைத்துப் பார்க்கும்போது அறிவின் மற்றுமோர் கோணமும் விளங்குகின்றது. அஃதென்னவெனில்,

**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**

**தந்நோய்போல் போற்றாக் கடை**

மற்ற உயிரின் துன்பத்தை தன் துன்பம்போல் கருதிக் காப்பாற்ற நினைக்காதபோது பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன்தான் என்ன என்பதாம். **அன்பின் வழியது உயிர்நிலை** என்பதும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு.

கிணறு, குளம் போன்றவற்றில் உள்ள நீர் எவ்விதம் எல்லா ஜீவர்களுக்கும் பொதுவாய் நின்று பயனைத் தருகின்றதோ அதுபோல் ஒருவன் பெற்ற அறிவு பிறர் துன்பத்தைப் போக்கக் கூடியதாக அமைதல் வேண்டும். இல்லையாகின் அந்த அறிவினால் பயன் இல்லை.

மேலும், **அறிவு அற்றம் காக்கும் கருவி** என்கிறது குறள். தனக்கோ பிறருக்கோ அழிவு வராமல் காக்கக் கூடியதே அறிவு என்பதே இதன் பொருள்.

இது குறித்து ஜீவகாருண்ய ஒழுக்கம் எனும் நூலில் நம் வள்ளல் அருளியதாவது, “ஜீவகாருண்யம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும். அதனால் உபகார சக்தி விளங்கும். அதனால் எல்லா நன்மைகளும் தோன்றும்.”

புலி, சிங்கம் போன்ற மிருகங்களிடம் கருணை கிடையாது அதனால் அறிவும், அன்பும் அதற்குக் கிடையாது. ஆகையால், அவை வாழுகின்ற காட்டில் அமைதியையோ, ஒழுக்கத்தையோ நாம் எதிர்பார்க்க முடியாது. அதுபோல் ஜீவகாருண்யம் – கருணை இல்லாத மனிதர்கள் வாழக்கூடிய இடத்திலும், நாட்டிலும் அறிவும், அன்பும் இருக்காது. அதனால் அமைதியும், ஒழுக்கமும் இருக்காது. அத்தகையோரால் பிறர்க்குத் துன்பமே விளையும். ஏன் அவர்களுக்கே அவர்கள் துன்பத்தை ஏற்படுத்திக் கொள்வார்கள் என தெள்ளத் தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற ஜீவராசிகளிலிருந்து நம்மை வேறுபடுத்தி மனித நிலையினின்றும் உயர்த்தி தெய்வ நிலைக்கு ஏற்றுவதே அறிவின் முக்கியப் பணி. எனவேதான், **தன்னை அறியும் அறிவே அறிவு** என்கிறார் திருமூலர்.

ஒரு பொருளைக் காணுதல் இந்திரியக் காட்சி, இந்திரிய அறிவு. அதன் நாம ரூப குணக் குற்றங்களை விசாரித்து அறிதல் கரணக் காட்சி, கரண அறிவு. அதன் பிரயோஜனத்தை அறிதல் ஜீவக்காட்சி ஜீவ அறிவு. அந்த வஸ்துவின் உண்மையை அறிதல் ஆன்மக் காட்சி, ஆன்ம அறிவு. இவை எல்லாவற்றையும் கடந்து அருட்கண், அருளறிவு விளங்குகின்றது. இவ்வருளறிவை அடைவதே மனித தேகமெடுத்த நம் ஒவ்வொருவரின் நோக்கம். அந்த அருளறிவினை அடைவதற்கான வழிவகைகளை உள்ளடக்கியதே அருள் நெறியாம் சுத்த சன்மார்க்க நெறி. இக்கல்வியினைக் கற்று மெய்ப்பொருள் உணர்ந்து இணையிலா இன்பத்தில் வாழ்வோமாக!

**தம்மை மறந்து அருளமுதம் உண்டு தேக்கும்**
**தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து நாயேன்**
**வெம்மையெலாம் தவிர்ந்து மனம் குளிரக் கேள்வி**
**விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டில் என்றும்**
**செம்மையெலாம் தரும்மௌன அணைமேல் கொண்டு**
**செறி இரவு பகல் ஒன்றும் தெரியா வண்ணம்**
**இம்மையிலே எம்மையினும் காணாச் சுத்த**
**இன்பநிலை அடைவேனோ ஏழையேனே. – திருஅருட்பா**

திருச்சிற்றம்பலம்

# மூத்தோர் சொல் அமிர்தம்

**போ**கும் வழியில் ஒரு மின்கம்பத்தில் சிறு துண்டுக் காகிதம் எழுதி தொங்கவிடப்பட்டிருந்தது. அப்படி என்னதான் எழுதியிருக்கிறது என்ற ஆர்வத்தில் ஒருவர் அதைப் படித்தார்.

அதில், "என்னுடைய 50 ரூபாய் தொலைந்துவிட்டது. யார் கையிலாவது கிடைத்தால் தயவுசெய்து இந்த விலாசத்தில் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். எனக்கு கண் பார்வை அவ்வளவு சரியில்லை" என்று விலாசத்துடன் எழுதியிருந்தது.

இதைப் படித்ததும் அந்த வழியில் பார்த்த ஒரு நபரிடம் விலாசம் கூறி வழி கேட்டார். அதற்கு அந்த வழிப்போக்கர், "இந்த அம்மாவா, கொஞ்சம் தூரம் போனால் ஓர் பழைய வீடு இருக்கும். அங்கதான் அந்த கண் தெரியாத அம்மா இருக்கு" என்று கூறினார்.

வழிப்போக்கர் கூறியபடி அவர் அந்த வீட்டை அடைந்தார். அதுவொரு சிறிய கீத்துக் கொட்டகை. ஒரு நாள் மழைக்குக் கூட தாங்காது. வெளியில் கண்களில் குழி விழுந்து, எலும்பும் தோலுமாக வயதான ஒரு அம்மா அமர்ந்திருந்தார். அவர் காலடி சத்தம் கேட்டதும், "யாரது?" என்று கேட்டாள். அதற்கு அவர், "அம்மா நான் இந்த வழியாக வந்தேன். எனக்கு 50 ரூபா கீழே கிடந்தது. அதை உங்களிடம் தரலாம் என்று வந்தேன்" என்றார்.

அதைக் கேட்டதும் அந்த அம்மா, "தம்பி ரெண்டு நாளா கிட்டதட்ட முப்பது முப்பத்தஞ்சு பேர் வந்து 50 ரூபா கீழே விழுந்து கிடைச்சது என்று சொல்லி குடுத்துட்டு போறாங்க. அந்தக் கடிதம் நான் எழுதவில்லை. எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது" என்று அழுதுகொண்டே சொன்னாள்.

அதற்கு அவர், "பரவாயில்ல அம்மா. நீங்க இத வச்சிக்கிங்க" என்று சொல்லி கொடுத்துவிட்டுத் திரும்பினார். அப்போது அந்த அம்மா, "தம்பி நீ போகும்போது மின்கம்பத்தில் இருக்கும் அந்த கடிதத்த மறக்காம கிழித்துப் போட்டுவிடு" என்று அறிவுரைத்தாள்.

கொடுத்தவர் மனதில் விதவிதமான எண்ணங்கள் எழுந்தன. யார் அந்த கடிதத்தை எழுதியிருப்பார்? அந்தக் கடிதத்தைக் கிழித்துவிடு என்று அந்த அம்மா ஒவ்வொருவரிடமும் கூறிக் கொண்டுதான் இருந்திருப்பார்.

ஆனால் யாரும் அப்படிச் செய்யவில்லை. யாரும் இல்லாமல் அனாதையாக வாழும் ஓர் உயிருக்கு கடித வடிவில் உதவி செய்த அந்த நண்பருக்கு மனத்தால் நன்றி சொல்லிக் கொண்டார். நன்மை செய்ய வேண்டும் என்ற மனம் இருந்தால் அதற்கு ஆயிரம் வழி இருக்கிறது என்பது அவருக்குப் புரிந்தது.

மனதில் யோசித்துக் கொண்டே வரும்போது வழியில் ஒருவர் அவரிடம், "அண்ணே! இந்த விலாசம் எங்கே இருக்கிறது என்று சொல்ல முடியுமா? கீழே இருந்து ஐம்பது ரூபாய் கிடைத்தது" என்று விசாரித்தார்.

உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூறெலாம் விலக
நீ அடைந்து விலக்குக மகிழ்க!
சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக!
உத்தமன் ஆகுக ஓங்குக! என்றனை

---

ஒரு பெண் நகரத்தின் வீதியொன்றில் கீரை விற்றுக் கொண்டு சென்றாள். வீட்டு வாசலில் மகனோடு அமர்ந்திருந்த தாய், கீரை வாங்க அவளை அழைத்து,"ஒரு கட்டு கீரை என்ன விலை?" என்று வினவினாள்.

"ஓரணா அம்மா" என்றாள் கீரைக்காரி.

"ஓரணாவா..? அரையணாதான் தருவேன். அரையணான்னு சொல்லி நாலு கட்டு கொடுத்துட்டு போ" என்றாள் அந்தத் தாய்.

"இல்லம்மா வராதும்மா" என்று கூறிய கீரைக்காரியைப் பார்த்து, "அதெல்லாம் முடியாது. அரையணாதான்" என பேரம் பேசினாள் அந்தத் தாய்.

பேரத்திற்கு ஒத்துக்கொள்ளாத அந்தப் பெண்மணி கூடையை எடுத்துக் கொண்டு சிறிது தூரம் சென்றுவிட்டு "மேல காலணா போட்டு கொடுங்கம்மா" என்றாள்.

"முடியவே முடியாது. கட்டுக்கு அரையணாதான் தருவேன்" எனப் பிடிவாதம் பிடித்தாள் அந்தத் தாய்.

கீரைக்காரி சிறிது யோசனை செய்துவிட்டு பிறகு "சரிம்மா உன் விருப்பம்" என்று கூறி நாலு கட்டு கீரையைக் கொடுத்துவிட்டு ரெண்டணா காசை வாங்கிக் கொண்டு கூடையை தூக்கி தலையில் வைக்கப் போகும்போது கீழே சரிந்தாள்.

"என்னடியம்மா காலைல ஏதும் சாப்பிடலயா?" என்று அந்த தாய் கேட்க, "இல்லம்மா போய்தான் கஞ்சி காய்ச்சணும்" என்றாள் கீரைக்காரி.

*"சரி இதோ வறேன்" என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்றவள், திரும்பும்போது ஒரு தட்டில் ஆறு இட்லியும் சட்னியும் வைத்து, "இந்தா சாப்பிட்டு போ" என்று கீரைக்காரியிடம் கொடுத்தாள் அந்தத் தாய்.*

*எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த அந்த தாயினுடைய மகன் "ஏம்மா அரையணாவுக்கு பேரம் பேசினீங்க. ஒரு இட்லி அரையணான்னு வச்சாகூட ஆறு இட்லிக்கு மூணணா வருதும்மா..?" என்று கேட்க அதற்கு அந்தத் தாய், "தம்பி, வியாபாரத்துல கணக்குப் பாக்கணும். ஆனா தருமத்துல கணக்கு பாக்கக் கூடாது" என்றாள்.*

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றான் பொருள் வைப்புழி.

**பொருள்:** வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# உள்ளது உரைத்தல்

## நினைப்பு மறைப்பு

**திருஅருட்பா வசனபாகத்திலிருந்து...**

**நினைப்பு மறைப்பு உண்டாவதற்குக் காரணம்:-**

*சந்திரன் அக்கினியோடு கூடி, சூரிய பாகத்தில் உண்டாகும் காற்றினால் அசைக்கப்படும்போது உண்டாகும்* **நினைப்பு.**

*சூரியன் அக்கினியோடு கூடி சந்திர பாகத்தில் உண்டாகும் காற்றினால் அசைக்கப்படும்போது உண்டாகின்றது* **மறைப்பு.**

**நினைப்பு என்பது:** *ஜனனம், மன அசைவு, ஒன்றை நினைத்தல், சகலகாலம், மேற்படி தத்துவம் வேறொன்றில் பற்றல், தத்துவத்தின் அசைவாகிய ஆவி மேலேறுதல், மேற்படி ஆவி ஏறின இடத்தில் நில்லாது அக்கிரமித்தல்.*

**மறைப்பு என்பது:** *மரணம், தூக்கம், மனம் ஒன்றைப் பற்றி உடனே மறத்தல், கேவல காலம், மேற்படி தத்துவத்தின் கூர்மை கீழ்ச்செல்லுதல், பிரக்ஞை (உணர்வு) இல்லாதிருத்தல், அதனது உஷ்ணம் அதிக்கிரமித்தல், மனம் ஆபாசப்பட்டு சூனியமாதல்.*

**மேற்குறித்த நினைப்பு மறைப்பு அற்று நிர்அதிசய ஆனந்தமாய் அருள் வடிவமாவதே சுத்த சன்மார்க்க சாதனம்.**

**திருச்சிற்றம்பலம்**

# இறையுண்மை விளக்கம்

அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை

**சச்சிதானந்தத் தனிப்பர வெளியெனும்**
**அச்சியல் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி**

சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய மூன்றும் சேர்ந்தது சச்சிதானந்தம். இதில் சத் என்பது உண்மை, சித் என்பது அறிவு, ஆனந்தம் என்பது இன்பம்.

ஆக, சத்து சித்து ஆனந்த வடிவாய், உண்மை அறிவின்ப வடிவாய் விளங்குபவன் இறைவன்.

எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
இயல் **உண்மை அறிவின்ப வடிவாகி** நடிக்கும்
மெய்ப்பொருளாம் **சிவம் ஒன்றே** என்றறிந்தேன்
உனக்கும் விளம்புகின்றேன் மடவாய்

என்ற அனுபவமாலைப் பாடலில் 'உண்மை அறிவின்ப வடிவாய் நடிக்கும் மெய்ப்பொருள் சிவம் ஒன்றே' என்று வள்ளல் பெருமான் கூறுவதைக் காண்க. இப்பாடலில் இயல் உண்மை என்பதன் பொருள் இயற்கை உண்மை என்பதாம்.

சத்து சித்து ஆனந்தம் ஆகிய இம்மூன்றையும் நம் வள்ளல் பெருமான் இயற்கை உண்மை, இயற்கை விளக்கம், இயற்கை இன்பம் என வழங்குவார். இதனை அகவலின் பிரிதோரிடத்திலும் விளக்கமாக அருளியுள்ளார்.

## இயற்கை உண்மையாம் சத்தின் இயல்பு

இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய முக்காலத்திலும் மாறாமல் ஒரே நிலையை உடையதாய், எக்காலத்தும் மாறாமல் ஒரே தன்மையுடன் விளங்குவதாய், எக்காலத்தும் உள்ள ஒரு பொருளுக்கு 'சத்து' என்று பெயர். அத்தகைய பெயர்க்கு இலக்கணமாய் அமைந்தது அருட்பெருஞ்ஜோதி இறைவன் மட்டுமே.

மேலும், அனைத்து உலகங்களில் உள்ளவர்களும் அங்கங்கே இருந்து ஆராய்ந்து அறிந்தாலும் இஃது இத்தன்மையது என அறிய முடியாத வகையில் விளங்குவதே அருட்பெருஞ்ஜோதியாம் தனித்தன்மையான சத்து.

வேதங்களும், இவற்றின் உச்சியான உபநிடதங்களும், ஆகமங்களும், அவை கூறுகின்ற முடிபுகளும் சென்று அடைவதற்கு அரிதாகிய ஒப்பு உயர்வில்லா அருட்பெருஞ்ஜோதியே அச்சத்தாம்.

எனவே, வேதங்களும் ஆகமங்களும் உபநிடதங்களும் இதுவே என்றும் உள்ள பொருள், இதுவே என்றும் நிலையான பொருள் என்று சத்தியம் செய்து வழுத்துகின்றன.

### இயற்கை விளக்கமாம் சித்தின் இயல்பு

சித்துப் பொருளுக்கு காலவரம்போ, இடவரையறையோ இல்லை. அதுவும் சத்தினைப்போல் என்றும் உள்ளது. எங்கும் நிறைந்தது. எக்காலத்தும் எவ்விடத்தும் அந்த அறிவு மாறுபடாமல் ஒரே தன்மையாய் விளங்கும். அவ்விதம் விளங்குவதும் அருட்பெருஞ்ஜோதி இறைவன் ஒருவரே.

அந்த அறிவே சத்தி சத்தர்களாகவும், 96 தத்துவங்களாகவும் அவை தோன்றற்குக் காரணமாகவும் உள்ளது.

இதுபோல், உலக நிலைகள், இந்திர பதம், பிரமபதம் போன்ற பத நிலைகள்; வகை வகையான உயிர்கள், அவற்றிற்கான உடல் வகைகள்; பல்வேறு அறிவு நிலைகள், அவ்வறிவுகளைக் கொண்டு அறியப் பெறுவன; நினைவுகள், நினைப்பவை; காட்சிகள், காண்பவை; பல்வேறு செயல்கள், அதன் பயன்கள்; இந்த அண்டத்திலுள்ள அசையும், அசையாத மற்றும் இவற்றில் சேராத பிறவும் தோன்றி விளங்க விளக்கம் செய்கின்றது இச்சித்தாகிய அருட்பெருஞ்ஜோதியே.

இதனால்தான், 'இஃது எல்லாம் செய்யவல்ல சித்து' என்று எல்லா வேத ஆகமங்களும் வியந்து புகழ்ந்துரைக்கின்றன.

### இயற்கை இன்பமாம் ஆனந்தத்தின் இயல்பு

இன்பம் தரும் பொருட்களுள் இதுவும் ஒன்று என்று சொல்வதற்கு இயலாத வகையில், எக்காலத்தும் ஒரே தன்மையானதாக விளங்குவதே இவ்வானந்தத்தின் இயல்பு.

இஃது இத்தன்மையது எனக் கூறமுடியாத, வேறு எதுவும் இதற்கு நிகரில்லாததாய் எங்கும் நிறைந்து விளங்குவதே இவ்வானந்தத்தின் இயல்பு.

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற நிலைகள் எல்லாவற்றையும் கடந்து அவற்றிற்கு மேலே ஜீவர்களின் ஏக்கங்களையெல்லாம் அறுத்து எல்லையில்லா இன்பத்தை அளிக்கும் நிலையில் இருப்பதே இவ்வின்பத்தின் இயல்பு.

அறிவுக்கு அறிவாயும், இந்திரிய விஷயங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக விளைந்து அம்மேல் விளைவின் இடைஇடையே ஓங்கும் தன்மை கொண்டதாகவும்; இப்பிறப்பிலும், மறுபிறப்பிலும் எப்பிறப்பிலும் அனுபவிக்கப்பட வேண்டிய ஒரே இன்பம் என்று

சொல்லப்படும் நிலையில் நிரம்பி நிற்கும் தன்மையே இவ்வின்பத்தின் இயல்பு.

சித்தி நிலைக்கு முதல் படியாகிய முத்திச் சாதனத்தை முடித்த ஜீவன் முத்தர்கள், பதமுத்தர்கள், பரமுத்தர்கள் என இவர்களும்; முத்தி சாதனத்தை முடித்து சித்திநிலை எய்திய கர்ம சித்தர்கள், யோக சித்தர்கள், ஞான சித்தர்கள் ஆகிய சித்தர்களும்; பலவேறு சத்தி சத்தர்களும் என எந்த திறத்தில் இருக்கின்றவர்களும் அல்லாத ஏனைய திறத்தவரும் அடைய வேண்டிய ஒப்பற்ற தன்மையுடையதே இவ்வின்பத்தின் இயல்பு.

எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லா நிலைகளில் உள்ள எல்லா உயிர்களும் அனுபவிக்கின்ற எல்லா இன்பமாகவும் இவ்வின்பமே விளங்குகின்றது. எனவேதான், நம் வள்ளல் பெருமானார் மேற்கண்ட அகவலில்,

சச்சிதானந்தத் தனிப்பரவெளியெனும்
அச்சியல் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி

என்று வியந்துரைக்கின்றார்.

இத்தகைய இயற்கை உண்மை அறிவின்ப வடிவமாகிய சச்சிதானந்தப் பொருளை நாம் எங்கே தேடுவது?

இதற்கும் நம் வள்ளல் பெருமானாரே விடை பகருகின்றார். அதாவது,

திருநிலைத் தனிவெளி சிவவெளி எனும்ஓர்
அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ்ஜோதி

என்ற அகவல் வரிகளே இதற்குச் சான்று.


அகரம் முதல் ஔகாரம் வரையில் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் முதலாகக் கொண்டு உரைத்திருக்கும் நம் பெருமான் ஆயுத எழுத்தைப் பற்றிக் கூறும்போது திருநிலை தனிவெளி சிவவெளி என்கின்றார்.

அஃதாவது, “அ” முதல் “ஔ” வரை உள்ள பன்னிரண்டு உயிரனுபவ நிலைகளைக் கடந்தால் மேல்வரும் அருளனுபவம் பதின்மூன்றாம் நிலை. அதுவே திருநிலை.

திரையோதசநிலை சிவவெளி நடுவே
வரையோதருசுக வாழ்க்கை மெய்ப்பொருளே

என்ற அகலிலும் இதைக் குறிப்பிடுகின்றார். திரையோதசம் என்பது பதின்மூன்றாம் நிலை.

உயிரெழுத்து பன்னிரண்டை அடுத்து பதின்மூன்றாவதாக வரும் எழுத்து ஆயுத எழுத்து (ஃ). இந்த அஃகேனத்திற்கு தனிநிலை என்றும் ஒரு பெயருண்டு. இதுவே திருநிலை தனிவெளி. இதுவே சிவவெளி. அஃதே அருள்வெளி. இத்திருநிலைத் தனிவெளி சிவவெளி அருள்வெளியாம் பதியில் வளர்கின்றது அருட்பெருஞ்ஜோதி.




பிண்டத்தில் வலக்கண், இடக்கண், நெற்றிக்கண் ஆகியனவே அண்டத்தில் சிற்சபை பொற்சபை ஞானசபைகளாக காட்டப்பெற்றன. மேலே கூறப்பட்ட திருநிலை, அருட்பெருஞ்ஜோதி அகவலின் பின்னோரிடத்திலும்,

ஒருநிலை இதுவே உயர்நிலை எனும்ஒரு
**திருநிலை** மேவிய சிவமே சிவமே எனக் கூறப்பெறுகின்றது.

**திருநிலை** பெற்றனன் அம்பலத்தான் அருள் தெள்ளமுதுண்டு
உருநிலைபெற்றனன் ஒன்றே சிவமென ஓங்குகின்ற
பெருநிலை பெற்றனன் சுத்த சன்மார்க்கம் பிடித்துநின்றேன்
இருநிலை முந்நிலை எல்லா நிலையும் எனக்கு உளவே.

**திருநிலைத்து** நல் அருளொடும் அன்பொடும்
சிறப்பொடும் செழித்து ஓங்க
உருநிலைத்து இவன் மகிழ்வொடு வாழ்வுற
உவந்துநின் அருள் செய்வாய்
இருநிலத்தவர் இன்புறத் திருவருள்
இயல்வடிவொடு மன்றில்
குருநிலைத்த சற்குருவெனும் இறைவ
நின் குறைகழல் பதம்போற்றி.

என்ற திருஅருட்பாக்களில் வரும் திருநிலைகளைக் கண்டு தெளிய வேண்டும். திரு என்பது பெரியவற்றிற்கெல்லாம் பெரியது. அதற்குமேல் பெரியது வேறெதுவும் இல்லை. எனவே, திருநிலை பெறவேண்டும். திரு, நிலைபெற வேண்டும்.

| | |
|---|---|
| திருநிலைத்தனிவெளி | – ஆன்மப்பிரகாசம் |
| சிவவெளி | – சிற்றம்பல வெளி |
| எனும்ஓர் | – என்னும் ஒரு |
| அருள்வெளிப்பதி | – அருள்வெளிப் பதியினிடத்தில் |
| வளர் | – வளரொளியாக விளங்கும் |
| அருட்பெருஞ்ஜோதி | – அருட்பெருஞ்ஜோதி |

*ஆன்மப்பிரகாசமே சிற்றம்பலம், ஞானசபை என்பார் நம் வள்ளற் பெருமான். அத்தகைய ஆன்மப்பிரகாசம் என்றும் சிற்றம்பலம் என்றும் சொல்லப்பெறுகின்ற அருள்வெளிப்பதியாகிய சத்திய ஞானசபையில் வளரொளியாக விளங்குகின்றார் அருட்பெருஞ்ஜோதி இறைவன்.*

தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தார்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே *என்ற திருமந்திரத்தையும்*

தூரதூர தூரமென்று சொல்லுவார்கள் சோம்பர்கள்
பாரும் விண்ணும் எங்குமாய் பரந்த அப்பராபரம்
ஊரும் நாடும் காடும் ஓடி உழன்று தேடும் ஊமைகாள்
நேரதாக உம்முளே அறிந்துணர்ந்து நில்லுமே
*என்ற சிவவாக்கியத்தையும் இங்கு கருத்தில் கொள்க.*

*இவ்விதம் எல்லா வேதாகமங்களும், உபநிடதங்களும் எய்துதற்கு அரிதாகிய, எல்லா சித்தர்களும், முத்தர்களும், சத்தி சத்தர்களும் போற்றி வணங்கக்கூடிய, சர்வ வல்லமை பொருந்திய, சச்சிதானந்த சொரூபராகிய அருட்பெருஞ்ஜோதி இறைவனை நம் உயிருள் விளங்கும் உத்தம சற்குருவை நாள்தோறும் துதித்து போற்றி வணங்கி சுகநிலைப் பெறுவோமாக!*

திருநாள் நினைத் தொழும் நன்னாள்
தொழாமல் செலுத்தியநாள் கருநாள் – வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

சித்தர் திருமூலர்
அருளிய

# திருமந்திரம்

வாய் திறவாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய் திறப்பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திறவாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய் திறவாவிடில் கோழையும் ஆமே. - மோனச் செல்வம்

**மோ**னம் காப்பவர் சிந்தையில் ஒரு செல்வம் உண்டு. ஆனால், பேசுபவர் தமது மூச்சை வீணாக்குவர். உயிரையும் சிறிது சிறிதாக போக்குவர். மோனம் காக்கும் யோகியர் தமது உடம்பின் சந்திர மண்டலத்தில் அமுதம் ஊறப்பெற்று, உயிரைப் பாதுகாப்பர். அவருக்கே சகஸ்ராரம் ஆகிய பேழை திறந்து அனுபவம் கிடைக்கும்.

---

உருவு அறியும் பரிசொன்று உண்டு வானோர்
கருவரை பற்றிக் கடைந்து அமுது உண்டார்
அருவரை ஏறி அமுது உண்ண மாட்டார்
திருவரையா மனம் தீர்ந்து அற்றவாறே. - பிறவி நீங்க

**சி**வபோகத்தை இலட்சியமாகக் கொள்ளுதலே மன ஒடுக்கத்திற்கும், மலத்தீர்வுக்கும், பிறவி அறுதலுக்குமான ஒரே வழி. இதைவிடுத்து வானோர் பாற்கடல் அமுது உண்டார். ஆயினும் இறந்து போனார்.

---

ஒன்பது வாசல் உடையது ஓர் பிண்டத்துள்
ஒன்பது நாடி உடையது ஓர் ஓடு இடம்
ஒன்பது நாடி ஒடுங்க வல்லார்கட்கே
ஒன்பது காட்சி இலை நல ஆமே. - ஒன்றாய்க் காணுதல்

**ஒ**ன்பது துவாரங்களை உடைய உடம்பில், ஒன்பது நாடிகளும் ஒடுங்கும் இடம் ஒன்று உண்டு. அது சுழுமுனை. அவ்வாறு ஒடுங்கப்பெறுவார்க்குப் பலவாய்க் காணும் காட்சி மாறி, ஒன்றாய்க் காணும் காட்சி வாய்க்கும்.

ஒன்பது நாடிகள்: இடகலை, பிங்கலை, சிங்குவை, புருடன், காந்தாரி, அக்கினி, அலம்புலி, சங்குனி, குணா (இவற்றுடன் சுழுமுனையைச் சேர்த்துத் தசநாடிகள் என்பது வழக்கு)

---

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே. - ஞானம்

**ஞா**னத்திற்கும் மேலான ஓர் அறநெறி உலகத்தில் இல்லை. இருப்பதாகக் கருதினால் அது நல்ல சமயம் ஆகாது. ஞானத்தின் நீங்கிய எந்தச் சாதனங்களும் முடிநிலை முத்தியைத் தரமாட்டா. அதனால், ஞானத்தில் சிறந்தவர்களே மக்களுள் சிறந்தவராவர்.

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

Wings of Wisdom

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.


# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

**Deposit INR - 500/**



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

| AYYAPPAN THANGAL | VALASARAVAKKAM | PORUR | OMR | VADAPALANI |
|---|---|---|---|---|
| 26792007 | 42105700 | 42107304 | 42863478 | 42642491 |



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# ஆழ்நிலை தியான முகாம்

அனுபவப் பகிர்வு

அன்பு உள்ளங்களே! கடந்த மே மாதம் 3, 4, 5 (வெள்ளி, சனி, ஞாயிறு) அன்று பொள்ளாச்சி, அர்த்தநாரிபாளையம், பெருமாள் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள நமது சன்மார்க்க யோக சாலையில் நடந்த ஆழ்நிலை தியான முகாமில் பங்கு கொண்ட அன்பர்களின் அனுபவப் பகிர்வையே இங்கு நாம் காணவிருக்கிறோம்.

1) "இந்த பயிற்சி வகுப்பை நடத்திய, நடத்த உதவியாக இருந்த அனைவருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மாரியாத்தா, முனுசாமி போன்ற சிறு தெய்வங்களைக் கும்பிடும் குடும்ப வழக்கத்தில் இருந்து வருகிறேன். மேற்சொன்ன சிறு தெய்வங்களுக்கு பலியிடும்போது அந்த உயிர் படும் பாடு மனத்தில் ஒரு பாவ நிலையை உண்டு பண்ணினாலும், அதை சமைத்த பின்பு ரசித்து உண்டேன்.

சமீபகாலமாக whatsapp friends மூலம் கேட்கும் தகவல்களை சீர்தூக்கிப் பார்க்கும்போது "காணிக்கை என்பது மனிதர்களுக்கு தலைமுடியாகவும், விலங்குகளுக்கு தலையாகவும் உள்ளது" என்ற வாசகம், இதுநாள் வரை தெய்வத்தின் பெயரால் ஒரு அறிவில்லாத காரியத்தை செய்துவிட்டேனே என்ற வருத்தத்தை உண்டுபண்ணியது.

அடுத்ததாக எனது நண்பன் முத்து சரவணனின் இல்ல அடிக்கல் நாட்டு விழாவில் அங்கு வந்த வள்ளலார் வழி குருமார்கள் ஆசி கொடுக்கும்போது என் தலையில் வைத்து சொன்னது "எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க" என்ற வாசகம்.

உண்மையில் ஒரு நான்கு ஐந்து மணிநேரம் என் மனதில் மறுபடி மறுபடியும் சொல்லிக் கொண்டே இருந்தேன். என்னுள் கேட்டுக்கொண்டும் இருந்தது. அதுமுதல் ஒரு வருட காலம் நான் அசைவம் உண்பதை தவிர்த்தும், முயற்சித்தும் வந்தேன். இன்று முதல் அந்த ஒழுக்கத்தை கடைபிடிக்க எண்ணியுள்ளேன். அதற்கு இந்த பயிற்சி வகுப்பு எனக்கு உதவியாக இருந்தது.

பயிற்சியில், தியானத்தில் கால் வலியின் காரணமாக என்னால் முழு ஈடுபாட்டுடன் செயல்படுவதில் சிரமம் இருந்தது. ஆகையால், முதலில் தாங்கள் கற்றுக் கொடுத்த யோகா மூலமாக வாழ்வியலை மாற்றி உடலை சரிபண்ண வேண்டும்.

தியானம் மிகவும் புது அனுபவமாக இருந்தது. மலையின் மீது அமர்ந்து சூரியனை தியானித்ததும், என்னால் சூரியனை பார்க்க

*முடிந்ததால் மிக்க மகிழ்ச்சி. அதில் நல்ல அனுபவம் கிடைத்தது. இந்த வாய்ப்பை அளித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மிக்க நன்றி.*

**மாமிசம் உண்பதை தவிர்க்க உள்ளேன். தவிர்த்துவிட்டேன். ஜீவகாருண்யம் செய்ய முடிவெடுத்துள்ளேன்.**

*பிறருக்கு உதவும் குணத்தையும், நேர் வழியில் நடக்கவும் என் தாய் தந்தையர் எனக்கு கற்றுக் கொடுத்தமையால் என்னால் இதில் எளிதாக நடக்க முடியும். மேலும், அவர்களும் ஜீவகாருண்யத்தை கடைபிடிக்க முயற்சி செய்கிறேன்."*

**– பாரதிதாசன், சிவகங்கை. செல்: 96299 99815**

**2)** *"வீட்டில் இருப்பவர்களின் எதிர்ப்பை மீறித்தான் நான் இந்த வகுப்பிற்கு வந்தேன். இயல்பாகவே கலகலப்பாக பேசும் என்னால் மௌனமாக இருக்க முடியாது என்று என் வீட்டில் நினைத்தார்கள். ஆனால், அது முடியும் என்ற வைராக்கியத்துடன் வந்தேன். மௌனம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. முடிந்த பிறகும் எனக்கு பேசப்பிடிக்கவில்லை. இனி மாதத்தில் ஒருநாள் வீட்டில் மௌன விரதம் இருக்கலாம் என்றும், பேச்சை குறைக்கலாம் என்றும் முடிவு செய்துள்ளேன்."* **– பத்மாவதி, புதுவை. செல்: 80715 15373**

**3) "***சன்மார்க்க குடும்பத்தில் பிறந்தாலும், இங்கு அனைவருக்கும் புரியும் வகையில் தெளிவாகச் சொல்லும் விதம் எங்களை ஈர்த்தது. முதலில் அமைதியையும், மௌனத்தையும் திட சங்கல்பத்துடன் மிக நீண்ட நேரம் இருக்கக் கற்றுத் தந்த விதமும் அறிவுப்பூர்வமான, தன்னலமற்ற, சொந்த கருத்து இல்லாத, பகுத்தறிவான வகையில் சன்மார்க்கத்தை கொண்டு சேர்க்கும் பாங்கும் அருமை. சன்மார்க்கத்தை அடுத்த கட்டத்திற்கு, அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்கிறீர்கள்.* **இவை எனக்கு ஒரு நல்ல குருவை காட்டியது.**

*இறைவனை நினைத்து தேமித்தேமி அழுத இந்த நாளை நான் என் வாழ்வில் மறக்க மாட்டேன். இறைவன்பால் ஆனந்தக் கண்ணீர் வந்ததை நினைக்க நினைக்க நெகிழ்ச்சி அடைகிறேன்.*

*மேலும், வீட்டிற்குச் சென்று என் தாய், தந்தை, தம்பி, மனைவி அனைவரிடமும் மன்னிப்புக் கேட்கத் தோன்றுகின்றது.*

*என் அகங்காரம் குறைந்துள்ளதை உணர்கிறேன். உங்களையும், சீர உதவி செய்த அனைவரையும் வணங்குகிறேன்."*

**– முத்து சரவணன், மதுரை.**

திருச்சிற்றம்பலம்

# சிறுவர்களுக்கான கோடைகால பயிற்சி முகாம்

## அனுபவப் பகிர்வு

அன்பர்களே! கடந்த மே மாதம் 11ஆம் தேதி முதல் 17ஆம் தேதி வரை சிறுவர் சிறுமியருக்கான கோடைகால சிறப்பு பயிற்சி முகாம் திருவண்ணாமலையில், வாயுலிங்கம் எதிரில் அமைந்துள்ள நமது சன்மார்க்க சங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. இருபத்தைந்து குழந்தைகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். பயிற்சியின் நிறைவு நாளன்று பிள்ளைகளுக்கும் பெற்றவர்களுக்கும் இடையே ஓர் புரிதல் உணர்வை ஏற்படுத்தும் வண்ணம், பிள்ளைகள் பெற்றவர்களிடம் என்ன எதிர்பார்க்கின்றனர் மேலும், பெற்றவர்கள் பிள்ளைகளிடம் என்ன எதிர்பார்க்கின்றனர் என்பதை எழுதச் சொன்னோம். அவற்றில் சிலவற்றை இங்கே காணவிருக்கிறோம். இதைப் படிக்கும் ஒவ்வொரு பெற்றோரும் மாதம் ஒருமுறை அல்லது இரண்டு மாதத்திற்கு ஒருமுறையாவது பிள்ளைகளுடன் சேர்ந்து சந்தோஷமான மன நிலையுடன் ஒருவருக்கொருவர் தம் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். மேலும், பிள்ளைகளின் கருத்துக்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இதுவொரு மனோதத்துவ அணுகுமுறை.

**முதலில் பிள்ளைகள் பெற்றோர்களிடம் என்ன எதிர்பார்க்கின்றனர் என்பதைக் காண்போம்.**

- அப்பா அம்மா என்னிடம் அன்பாக இருக்க வேண்டும். கோபமாகப் பேசக் கூடாது.
- வீட்டில் அப்பா அம்மா சண்டை போடாமல் இருக்க வேண்டும்.
- அப்பா அம்மா என்னோடு விளையாட வேண்டும்.
- அசைவம் சாப்பிடு என்று வற்புறுத்தக் கூடாது.
- கழுதை, எருமை என்று என்னைத் திட்டக் கூடாது.
- மற்றவர்களோடு என்னை compare பண்ணக் கூடாது.
- நீங்க TV பார்த்துக் கொண்டே இருந்துவிட்டு என்னை பார்க்கக் கூடாது என்று திட்டக் கூடாது.
- Low marks வாங்கினா அடிக்கக் கூடாது.
- நீங்க cell phone use பண்ணிகிட்டு எங்களை cell phone use பண்ணக் கூடாது என்று சொல்லக்கூடாது.

**இனி பெற்றோர்கள் பிள்ளைகளிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதைக் காண்போம்.**

❖ தினமும் இறைவணக்கம் செய்ய வேண்டும்.
❖ அவன் அவனாக இருக்க வேண்டும். பொறுமை, நற்குணங்கள் நிறைந்தவனாக இருக்க வேண்டும்.
❖ வீட்டை சுத்தமாகவும், எடுத்த பொருளை எடுத்த இடத்தில் வைத்துப் பழகுதல் வேண்டும்.
❖ வீட்டு வேலைகள் செய்து பழகுதல் வேண்டும். எளிமையாக இருக்கப் பழக வேண்டும்.
❖ உணவை வீணாக்காமல் அதன் முக்கியத்தை உணர வேண்டும். காய்கறிகளை விரும்பி உண்ண வேண்டும்.
❖ TV பார்ப்பது மற்றும் Phone-ல் விளையாடுவதைக் குறைக்க வேண்டும்.
❖ வீட்டில் உள்ள பெரியோர்களை எதிர்த்துப் பேசாமல் இருக்க வேண்டும்.
❖ Junk foods சாப்பிடும் மனோபாவம் அறவே கூடாது.
❖ நல்ல திறமையான விவசாயியாக, சோறு போடும் மனித தெய்வமாக திகழ வேண்டும்.
❖ Always think better possibilities in every issues.
❖ ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் பழகி சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.
❖ வீட்டில் பெற்றோர்களுடன் கோபப்படக் கூடாது.
❖ தன் வேலைகளைத் தானே செய்ய வேண்டும்.

இவ்விதம் ஒருவருக்கொருவர் கலந்து பேசி நிறை குறைகளை தெளிந்தால் நலம் பயக்கும்.


## நூல் அறிமுகம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

**முல்லைப் பதிப்பகத்தின் புதிய வெளியீடு!**

1) ஞானமணி, ஞானத்தமிழாரர் டாக்டர். **வை. இரத்தினசபாபதி** அவர்களின் இராமலிங்க சுவாமிகள் அருளிய **திருஅருட்பெருஞ்ஜோதி அகவல் மூலமும் உரையும்**


176 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ.70/- மட்டுமே.

2) சன்மார்க்க தேசிகன் ஊரன் அடிகளின் **வள்ளலார் வரலாற்றுக் குறிப்புகள்**

80 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ.40/- மட்டுமே

தொடர்புக்கு: 323/10, கதிரவன் காலனி, அண்ணாநகர் மேற்கு, சென்னை.
செல்: 98403 58301

# மனித வாழ்வின் மூலதனம்



ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் வருகின்றதென்பதில் ஐயமில்லை. ஆனால், அதனை நழுவவிடுகின்றானா அல்லது அதனைப் பயன்படுத்திக் கொள்கின்றானா என்பது அந்த நேரத்தில் அதனை உணர்ந்து எவ்விதம் நடக்கின்றான் என்பதைப் பொறுத்தது. இதில் சிலருக்கு வாய்ப்பொன்று வந்தது எனச் சிந்திக்கவே இயலாதிருப்பர். இன்னும் சிலர் இதனைவிட நல்ல வாய்ப்பு வரட்டுமே என காலம் தாழ்த்தி நேரத்தை வீணாக்கி வாய்ப்பினையும் நழுவவிடுவர். ஒருவனுக்கு வரும் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுதலே அவனுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்கான மூலதனம் என்பதை உணர்ந்து செயல்படுவதே செறிந்த அறிவுச் செயலாம்.

ஆனால் சோம்பலில் காலம் தாழ்த்தி நல்ல சந்தர்ப்பங்களை நழுவவிட்டவர்கள் வாழ்வின் வேக ஓட்டப்பந்தயத்தில் தோல்வியையேத் தழுவுவார். **"காலம் அறியாதோன் கையுறல் பொய்"** என்கிறது முதுமொழிக் காஞ்சி. உரிய காலத்தில் செய்யத் தொடங்காத காரியம் கைகூடாது என்பதாம்.

ஒரு அழகான இளைஞன் விவசாயி ஒருவரின் மகளைத் திருமணம் செய்ய விரும்பி அவரிடம் சென்று அனுமதி கேட்டான். அதற்கு விவசாயி அந்த இளைஞனைப் பார்த்து, "இளைஞனே நீ என் மகளை மணக்க விரும்பினால், நான் வளர்க்கும் மூன்று காளைகளை அடுத்தடுத்து அவிழ்த்து விடுவேன். அதில் ஏதாவது ஒன்றின் வாலை நீ தொட்டால் போதும். என் மகளை மணமுடிக்க சம்மதிக்கிறேன்'' என்று சொன்னார். அதற்கு அவனும் ஒப்புக் கொண்டான்.

மாடுகள் அடைக்கப்பட்டிருந்த தொழுவத்தின் கதவு திறந்தது. முதலில் ஒரு மாடு வந்தது. மிகவும் முரட்டுத்தனமான தோற்றம் கொண்ட அந்த மாடு சீறியபடி பாய்ந்து வந்தது. அதைப் பார்த்த இளைஞன் வாலைப் பிடிக்கத் தயக்கம் கொண்டு அடுத்த மாட்டை பார்க்கலாம் என்று விட்டுவிட்டான்.

சிறிது நேரத்தில் அதைவிட பெரிய மாடு வெளியே ஓடி வந்தது. பார்க்கவே பயங்கரமான தோற்றம். அவனை முட்டி மோதி கொல்வதற்காக கடும் வேகத்துடன் ஓடி வந்தது.

இளைஞன் அச்சப்பட்டு இதுவும் வேண்டாம் மூன்றாவதைப் பார்க்கலாம் என்று முடிவு செய்து வேகமாக ஓடி பாதுகாப்பான இடத்தில் நின்று கொண்டான். ஓடி வந்த மாடு அதே வேகத்தல் வேலிக்கு வெளியே ஓடிச் சென்றது.

மூன்றாவது முறையாக கதவு திறக்க, அப்போது வெளியே வந்த மாட்டைப் பார்த்து இளைஞன் முகத்தில் புன்சிரிப்பு வந்தது. அவன் வாழ்க்கையில் பார்த்ததில் இதுவே மிகவும் பலவீனமான மாடு. எலும்பும் தோலுமாய் பார்ப்பதற்கே பரிதாபமாய் ஓட முடியாமல் ஓடிவந்தது. இந்த மாட்டை விடக்கூடாது. இதைத்தான் நான் பிடிக்க வேண்டும் என்று தீர்மானித்து அதன் வாலைத் தொட தயாராக இருந்தான். மாடு அருகில் வந்ததும் ஒரு தாவுதாவி மாட்டின் வாலைத் தொடப்போனான். ஆனால் அதிர்ச்சி அடைந்தான். ஆம். அந்த மாட்டிற்கு வாலே இல்லை.

இப்படித்தான் நம் வாழ்விலும் எதையாவது ஒன்றை அடைய வேண்டுமென எண்ணுகிறோம். ஆனால், சோம்பல், முயற்சியின்மை என்ற காரணங்களால் வாய்ப்புகளைத் தவரவிட்டு துன்புறுகிறோம்.

**குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து**

**மாண்ட உஞற்றில் அவர்க்கு** என்கிறது குறளின் மடியின்மை அதிகாரம். அதாவது, சோம்பலில் அகப்பட்டு சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர்க்கு அவர் பிறந்த குடியின் பெருமை அழிந்து குற்றம் பெருகும் என்பதாம்.

ஒருவனிடத்தில் சோம்பல் குடிபுக அவனிடத்தில் அதனின் சுற்றமாகிய காலம் தாழ்த்துதல், நீண்ட தூக்கம், துயரம், அச்சம் போன்றவை சேர்ந்து கொள்ளும். இதில் காலம் தாழ்த்துதல் என்பது நம் ஒவ்வொருவருக்குள்ளேயும் உள்ள கண்ணுக்குத் தெரியாத எதிரி. ஒருவன் வாழ்வில் வரும் சந்தர்ப்பம் அல்லது வாய்ப்பை நழுவவிட்டால் பிறகு அது மீண்டும் வராது என்பது நம் ஒவ்வொருவர் அனுபவத்திலும் கண்டதே. எனவேதான் நம் வள்ளல் பெருமானின், "உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபத்தை **காலம் உள்ளபோதே** அறிந்து அடைய வேண்டும்" என்ற வாக்கியத்தில் "காலம் உள்ளபோதே'' என்ற வார்த்தையைக் கையாண்டுள்ளார். இங்கு **மனிதப் பிறப்பு** என்ற வாய்ப்பும், **காலம்** என்ற வாய்ப்பும் இரண்டுமே போனால் திரும்பவும் வராது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, நம் மனதை சோம்பலில் தோய விடாமல், துயரத்தில் மூழ்க விடாமல் ஊக்க உணர்வோடு செயல்பட வேண்டும். இதைப்பற்றி இங்கு காண்போம்.

ஒரு அரசன் ஒருநாள் நகர்வலம் சென்றிருந்தான். இரவு நேரமாகிவிடவே வழியில் ஒரு நெசவாளியின் வீட்டில் தங்கினான். அந்த நெசவாளிக்கோ தன் வீட்டிற்கு வந்திருப்பது அரசன் என்பது தெரியாது. அரசன் காலையில் எழுந்தபோது நெசவாளி நூல் நூற்கத் தொடங்கியிருந்தான்.

அவனது இடது கையில் ஒரு கயிறு கட்டப்பட்டிருந்ததைப் பார்த்த அரசன் அந்த நெசவாளியைப் பார்த்து, ''இதை ஏன் கட்டியிருக்கிறாய்'' என்றான். அதற்கு, "தொட்டிலில் உள்ள குழந்தையை ஆட்டுவதற்கு" என்றான்.

அவன் அருகில் ஒரு நீண்ட குச்சி இருந்தது. "இந்தக் குச்சி எதற்காக" என்று கேட்ட அரசனுக்கு "வெளியே என் மனைவி தானியங்களை வெயிலில் காயவைத்திருக்கிறாள். இந்தக் குச்சியின் மறுமுனையில் கருப்பு கொடியைக் கட்டியிருக்கிறேன். இதை அசைத்தால் பறவைகள் அருகில் வராது" என பதிலளித்தான் நெசவாளி.

அவனது வீட்டின் ஜன்னலுக்கு வெளியே நாலைந்து சிறார்களின் முகம் தெரிந்தது. நெசவாளியைப் பார்த்து "அவர்கள் என்ன செய்கிறார்கள்?'' என்று கேட்டான் அரசன். அதற்கு நெசவாளி, "நூற்பு வேலை செய்துகொண்டிருக்கும்போது வாய் சும்மாதானே இருக்கிறது. அதனால், எனக்குத் தெரிந்த பாடங்களை நடத்துகிறேன். அவர்கள் வெளியே இருந்து கேட்கிறார்கள்'' என்றான்.

"அவர்கள் ஏன் வெளியே இருக்கிறார்கள். உள்ளே வரலாம்தானே'' எனக் கேட்டான் அரசன். அதற்கு நெசவாளி, "அவர்கள் காதுதான் நான் நடத்தும் பாடத்தைக் கேட்கிறது. ஆகவே, அவர்களை என் வீட்டுக்கு முன்னால் உள்ள மண்ணை குழைத்துத் தரும்படி செய்திருக்கிறேன். என்னிடம் பாடம் கேட்கும்போது அவர்கள் காலால் சேற்றை குழைத்துக் கொண்டிருப்பார்கள்'' என்றான். ஒரே நேரத்தில் இத்தனை காரியங்களைச் செய்ய முடியுமா என அரசனுக்கு வியப்பு தாங்கமுடியவில்லை.

நெசவாளி மேலும் சொன்னான், "அதுமட்டுமல்ல. என் மனைவி கிரேக்கத்துப் பெண். ஒவ்வொரு நாளும் பத்து கிரேக்கச் சொற்களை சிலேட்டில் எழுதி வைத்துப் போகிறாள். வேலை செய்துகொண்டே அதையும் கற்று வருகிறேன்'' என்றான்.

மனத்தில் சோம்பலுக்கு இடம்கொடாமலும், துயரத்தைக் கண்டு துவளாமலும் நேர்மறையான எண்ணங்களோடும், ஊக்கத்தோடும், விடாமுயற்சியோடும் செயலாற்றினால் **"வெற்றி நிச்சயம்."**

**திருச்சிற்றம்பலம்**

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை அரசு மருத்துவமனையில் கஞ்சி வார்த்தல் | -ரூ.2,000/- |
| மதிய சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.8,500/- |
| மதிய அன்னதானதிற்கு | -ரூ.5,000/- |
| இரவு சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.8,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.15,000/- |
| பசு பராமரிப்பிற்கு (22 பசுக்கள்/ஒரு நாளைக்கு) | -ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) -15லி | -ரூ.1,900/- |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through: HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

*அருள்திரு* **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

*அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-*

**+91 9487454688**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற **வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு** மாதஇதழில்


- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

**ஆண்டு சந்தா ரூ.120**

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். **5 வருட சந்தா ரூ.600/-** தொடர்புக்கு: **8012680865**

www.vallalarmission.org
vallalartrust@gmail.com
www.facebook.com/vallalarmission
Vallalarmission. Cell no: +91 99427 76351





# கோசாலை

அன்பு உள்ளங்களே!

உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.



பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்
கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு: +91 91235 38685, +91 94874 54688**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly June 2019, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# வடலூர் மாதப்பூசம்

**04.07.2019** – ஆனி 19 – வியாழன்

**31.07.2019** – ஆடி 15 – புதன்

**28.08.2019** – ஆவணி 11 – புதன்

**24.09.2019** – புரட்டாசி 07 – செவ்வாய்க்கிழமை

**05.10.2019** – புரட்டாசி 18 – சனிக்கிழமை
அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரால் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் இப்பூவுலகிற்கு வருவிக்கவுற்ற திருநாள்

**21.10.2019** – ஐப்பசி 04 – திங்கட்கிழமை

**24.10.2019** – ஐப்பசி 07 – வியாழக்கிழமை
வள்ளல் பெருமானார் சன்மார்க்கக் கொடி கட்டிய திருநாள்

தொடர்புக்கு: **88385 40176, 63801 11475**

*அனைவரும் வருக! குருவருள் பெறுக!!*

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: **+91 80126 80865**